21.03.2024

<u>கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமா்வு வழக்கு எண். 20/2019</u>

அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயா் | மஜீத் | | |
| த/பெ | ஷேக்பக்ரூதின் | | |
| கிராமம் | எடப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூா் | வயது | 53 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளா் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறாா்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது திருக்கோவிலூரில் பிரியாணி கடை வைத்து நடத்தி வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன என் ஊரைச் சோ்ந்த அப்துல் ஜபாா் என்பவரை எனக்கு தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன அப்துல் ஜபாா் எனக்கு மாமன் முறை ஆவாா். சுமாா் 6 வருடங்களுக்கு முன்பு அவா் இறந்துவிட்டாா். அவா் இறப்பதற்கு 10 நாட்களுக்கு முன்பு என்னையும், என் ஊரைச் சோ்ந்த ஜாகீா் என்பவரையும், என் வீட்டிற்கு அருகில் உள்ள இடம் சம்மந்தமாக பஞ்சாயத்து செய்தாா். அவா் இறந்த அன்று 11 மணிக்கு எங்கள் இருவரையும் அவா் வீட்டிற்கு அழைத்து பேசி சுமூகமாக பேசி 12.30 மணியளவில் அவா்களை அனுப்பி வைத்துவிட்டாா். அன்று மாலை சுமாா் 6.30 மணியளவில் அவா் அந்த வீட்டில் இறந்துகிடப்பதாக கேள்விப்பட்டு நாங்கள் சென்று பாா்க்க போனோம் ஆனால் கூட்டமாக இருந்ததால் பாா்க்கமுடியவில்லை. அவா் எப்படி கிடந்தாா் அவருக்கு என்ன ஆனது என்பது குறித்து நான் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 27.06.2018ந் தேதி அன்று தான் அந்த வீட்டில் சமரசம் நடந்ததாகவும்,

பின்னிட்டு கொலை சம்மந்தமாக செய்தி கேள்விப்பட்டு நான் போய் பார்த்ததாகவும், அப்போது அப்துல் ஜபார் வெட்டு காயங்களுடன் ரத்த கறையுடன் படுக்கும் கட்டிலுக்கு அருகில் கிடந்தார் என்றும், சுவர்களில் ரத்த கறை இருந்தது என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு இப்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2,3 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**<u>5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

நான் அங்கு போவதற்கு முன்பே அங்கு காவல் துறையினர் இருந்தார்கள். அங்கு எங்களை எதுவும் விசாரிக்கவில்லை.

**<u>1,4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**